සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

**51 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ......................................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி I**
- **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**பகுதி II**
- **மூன்று** உப பகுதிகளைக் கொண்டது.
- **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ', 'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி **I,** பகுதி **II** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I | |
|---|---|
| **பகுதி** | **புள்ளி** |
| I | |
| II | |
| **மொத்தம்** | |
| **1 ஆம் பரீட்சகர்** | **2 ஆம் பரீட்சகர்** |
| | |

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**1.** மகிந்த தேரரின் வருகையின் பின்பு இலங்கையில் அமைக்கப்பட்ட புராதன தாதுகோபுரம்
(1) மிகிந்தலை அம்பஸ்தல தாதுகோபுரம் ஆகும்.
(2) மிகிந்தலை கண்ரக சைத்திய ஆகும்.
(3) அநுராதபுரம் மிரிசவெட்டிய தாதுகோபுரம் ஆகும்.
(4) அநுராதபுரம் தூபராம தாது கோபுரம் ஆகும்.
(5) அநுராதபுரம் ஜேதவனராம தாதுகோபுரம் ஆகும். (.........)

**2.** புதிய களனி விகாரை சுவர் ஓவிய நிர்மாணத்தின் போது,
(1) புதிய விகாரை ஓவியப் பாணி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
(2) இரு கருப்பொருட்களின் கீழ் ஓவியங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
(3) கீழைத்தேய மேலைத்தேய இரு மரபுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.
(4) கலைத்துவம் மிக்க நளினமான இரேகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(5) முப்பரிமான பண்புகளை வெளிப்படுத்தும் வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (.........)

**3.** வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்களின் பாறை ஓவிய உருவகத்தின் நோக்கமானது
(1) ஓய்வு நேரங்களில், வேட்டையாடும்போது பெற்றுக்கொண்ட அனுபங்களை வரைதலாகும்.
(2) விலங்குருவங்களை வரைவதன் மூலம் கிடைக்கப்பெறும் மன நிம்மதியாகும்.
(3) விலங்குருவங்களை வரைந்து வைத்திருப்பதால் விலங்குகள் தமது இரைக்கு அகப்படும் என்ற நம்பிக்கையாகும்.
(4) விலங்குகள் தொடர்பாக அவர்களிடமிருந்த நம்பிக்கையை ஓவியங்கள் மூலம் வெளிப்படுத்துவதாகும்.
(5) வனத்தில் கொடூரமான வன விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகும். (.........)

[பக் 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



**4.** அநுராதபுர காலத்திற்குரிய ஹிந்தகல ஓவியங்களின் சிறப்பம்சமானது,
(1) இரேகைகள் மூலம் கருப்பொருளை முன்னிலைப்படுத்தி காட்டுவதாகும்.
(2) வர்ண பயன்பாட்டின் மூலம் மனித உருவங்களில் முப்பரிமானத்தைக் காட்டுவதற்கு முயற்சித்தமையாகும்.
(3) ஒரு நிகழ்வை ஒரு தளத்தில் வெளிப்படுத்துவதற்கு முயற்சித்தமையாகும்.
(4) புத்தரின் உருவத்தையும் மனித உருவங்களையும் இயற்கையாக வரைவதற்கு முயற்சித்தமையாகும்.
(5) நிகழ்வுகளை சித்திரிக்கும்போது மனித செயற்பாடுகளைக் காட்ட முயற்சித்தமையாகும். (………)

**5.** கொழும்பு காலத்தில் தோன்றிய ஓவியக் கலைஞர்களிடையே எம் சார்ளிஸ் ஓவியர் சிறப்பிடம் பெறுவது,
(1) பௌத்த ஓவியங்களை அச்சு ஊடகங்களில் உருவாக்குவதில் முன்னோடிக் கலைஞராக திகழ்ந்ததாலாகும்.
(2) இலங்கை முழுவதும் உள்ள விகாரைகளில் எண்ணிலடங்காத ஓவியங்கள் வரைந்த கலைஞர் என்பதாலாகும்.
(3) சுவர் ஓவியங்களில் கட்டட நிர்மாணம் மற்றும் ஆடை அணிகலங்களை இந்திய பண்புகளுக்கேற்ப ஓவியங்களாக வரைந்தமையாலாகும்.
(4) ஓவியங்களைப் போன்றே சிற்பக் கலையிலும் விசேட திறமை காட்டிய கலைஞர் என்பதனாலாகும்.
(5) ஓவியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தனது ஓவியப் பாணியை கட்டியெழுப்பியதாலாகும். (………)

● **6** தொடக்கம் **10** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை, 1** தொடக்கம் **9** வரையில் இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


**1**


**2**


**3**


**4**


**5**


**6**


**7**


**8**


**9**

**6.** பியே மொன்றியானின் ஓவியச் செல்வாக்கை தனது ஓவியங்களில் பயன்படுத்திய இலங்கை ஓவியக் கலைஞரின் ஓவியம் எது?
(1) **1** (2) **2** (3) **3** (4) **6** (5) **8** (………)

**7.** உலகின் இயற்கையான தன்மையை ஒரு பாணியாக ஆய்வு செய்த கலைஞர்களின் படைப்புகள் எவை?
(1) **1,3** (2) **2,3** (3) **3,6** (4) **6,7** (5) **8,9** (………)

**8.** கருப்பொருளுக்கான மெய்நிலைகளுக்குப் பதிலாக உணர்வுரீதியான மெய்நிலைகளைக் காட்டும் சிற்பங்களிடையே, வரலாற்றுக்கால வரிசைக்கேற்ப ஒழுங்கு முறையில் காட்டும் விடை எது?
(1) **4,8,9** (2) **4,9,8** (3) **8,4,9** (4) **8,9,4** (5) **9,8,4** (………)

**9.** கனவடிவவாத கலைச் செல்வாக்கின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட ஓவியங்கள் எவை?
(1) **1,2,3** (2) **1,6,7** (3) **2,3,5** (4) **2,3,6** (5) **3,6,7** (………)

**10.** மறுமலர்ச்சி, மனப்பதிவுவாத, கனவடிவவாத, அரூப வெளிப்பாட்டுவாத ஓவியங்கள் ஆகியன ஒழுங்கு முறையில் காட்டப்பட்டிருக்கும் விடை எது?
(1) **5,1,6,3** (2) **5,2,1,7** (3) **5,3,6,2** (4) **5,3,7,1** (5) **5,7,2,1** (………)

[பக் 3 ஐப் பார்க்க

● **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.



**A**



**B**



**C**



**D**



**E**

11. **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஹரி பீரிஸ் கலைஞரின் 'இந்திராணி' எனப்படும் ஓவியம்
    (1) தனி நிற வர்ண வேறுபாடுகளைக் கொண்ட ஓவியமாகும்.
    (2) வேகமான தூரிகைத் தடங்களால் பூர்த்தி செய்யப்பட்ட பிரதிமை ஓவியமாகும்.
    (3) சாஸ்திரலாய யதார்த்தவாதம் அற்ற வெளிப்பாட்டுவாத ஓவியமாகும்.
    (4) பல் பாணி கலைப் பண்புகளை வெளிப்படுத்தும் ஓவியமாகும்.
    (5) இயற்கையான பண்புகள் வெளிப்படுமாறு வர்ண பயன்பாட்டைக் கொண்ட ஓவியமாகும். (.........)

12. **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஜோர்ஜ்கீட் கலைஞரின் 'ஜரசந்த' எனப்படும் ஓவியம்
    (1) கனவடிவவாத மாதிரியின் மீது கட்டியெழுப்பப்பட்டதாகும்.
    (2) பல வர்ண எண்ணெய் வர்ணத்தைப் பயன்படுத்தி வரையப்பட்டதாகும்.
    (3) ஒரு பாணியிலான மாதிரியின் மீது அமைக்கப்பட்டதாகும்.
    (4) பொருட்களின் இயல்பு நிலையை விகாரப்படுத்தி காட்டப்பட்டுள்ளதாகும்.
    (5) அரூப வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். (.........)

13. **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள போல் கோகேன் கலைஞரின் 'மஞ்சள் நிற இயேசுநாதர்' (The Yellow Christ) எனப்படும் ஓவியம்
    (1) நவீன கலையின் ஒழுங்கமைப்பு உத்திகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டதாகும்.
    (2) அரூபக் கலையின் வெளிப்பாட்டுத் தன்மையை, குறியீட்டு ரீதியாக வெளிப்படுத்தலாம்.
    (3) இயற்கைவாத பண்புகளிற்கு ஏற்ப முப்பரிமான பண்பை பயன்படுத்தியதாகும்.
    (4) இயற்கை உலகின் காட்சி நோக்குகள் சுருக்கிக் காட்டப்பட்டதாகும்.
    (5) வடிவங்களை வெளிக்கொணர இரேகைகள் மற்றும் வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (.........)

14. **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள போல் செசானின் 'சீட்டாடுவோர்' (The Card Players) எனப்படும் ஓவியம்.
    (1) இயற்கையான வடிவங்களை அவ்வாறே பயன்படுத்தி உருவாக்கப்பட்டதாகும்.
    (2) இருள் வர்ணங்கள் மனித உருவங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
    (3) திண்ம உருவப் பண்புகள் வெளிப்படும் வகையில் வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
    (4) நிர்மாணத்தின் போது கருப்பொருளை மையப்படுத்தியும் ஏனைய பகுதிகள் சமநிலையைப் பேணும் வகையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
    (5) மனப்பதிவுவாத கலையின் செல்வாக்கைப் பின்பற்றி வரையப்பட்டுள்ளது. (.........)

PAST PAPERS WIKI

15. **E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ராஜா ரவிவர்மாவின் 'சரஸ்வதி' ஓவியம்
    (1) ஐரோப்பிய சாஸ்திராலாய யதார்த்தவாத நுட்பத்தினை பின்பற்றி வரையப்பட்டதொன்றாகும்.
    (2) கற்பனை உருவமொன்று கன்வஸின் மீது மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது
    (3) இயற்கையான ஒளியைப் பயன்படுத்தி உருவங்களின் பகுதிகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.
    (4) கன்வஸின் மீது கூறுகளின் முழுமையான வடிவம் மிகவும் நேர்த்தியான வடிவத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.
    (5) தரைத் தோற்றம் மற்றும் பின்னணி மனித உருவங்களுடன் ஒன்றிணைந்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (.........)

Past Papers Wiki



● **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை பின்வரும் F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

**16.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இராணி மாளிகையின் சந்திரவட்டக்கல்
(1) அரை வட்டவடிவமான நிரல்களாகப் பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட செதுக்கல் அரைவட்ட பலகையாகும்.
(2) செதுக்கல் பாணிகளுக்கிடையே மிகவும் விசேட வகையிலான செதுக்கல்களால் அலங்கரிக்கப்பட்ட நிர்மாணமாகும்.
(3) அநுராதபுர காலத்தின் சிறந்த சந்திரவட்டக்கல் ஆகும்.
(4) பௌத்த சமய எண்ணக்கருக்களில் ஒன்றான மறுபிறவியை (பவ சக்கரத்தைச்) சித்திரிக்கும் செதுக்கலாகும்.
(5) சமயத் தலமொன்றிற்குள் பிரவேசிக்கும் படிக்கட்டின் அடியில் அமைக்கப்பட்ட செதுக்கலாகும். (.........)

**17.** **G** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பனாபிட்டிய அம்பலத்தின் மரத்திலான செதுக்கல்
(1) கம்பளைக் காலத்திற்குரிய பொதுக் கட்டிடத்தில் காணக்கூடியதாகும்.
(2) கண்டிய மரபுரீதியான ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும்.
(3) செதுக்கல் முறைகளுக்கேற்ப அமைக்கப்பட்ட அரைப் புடைப்புச் செதுக்கலாகும்.
(4) விரிவான தகவல்களைக் குறைந்த பட்சமாகக் கொண்ட கரடு முரடான தன்மை கொண்ட செதுக்கலாகும்.
(5) மரத்தினாலான கட்டட நிர்மாணத்தை அலங்கரிப்பதற்கு செய்யப்பட்ட செதுக்கலாகும். (.........)

**18.** **H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ரத்தின பிரசாத மண்டபத்தில் காணப்படும் நாகராஜ காவற்கல்
(1) பல கட்டங்களைக் கடந்து படிப்படியாக வளர்ச்சியடைந்ததன் உச்ச கட்டமாகும்.
(2) சமயத் தலமொன்றின் பாதுகாப்பை குறியீடாகக் காட்டுவதாகும்.
(3) கைபிடிக்கு (கொரவக்கல்) ஒரு ஆதாரமாக அமைக்கப்பட்டதாகும்.
(4) நாக பழங்குடியினரை காவலில் ஈடுபடுத்துவதை குறியீடாக பிரதிநிதித்துவப்படுத்துவதாகும்.
(5) நாகபடம் கொண்ட தலைக் கவசத்தைக் கொண்டிருப்பதால் நாகராஜா எனப் பெயர் பெற்றதாகும். (.........)

**19.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை
(1) முகமூடி அணிந்த விருட்ச தேவதையைச் சித்திரிக்கின்றது.
(2) கொடிய காட்டு விலங்குகளுக்கு அதிபதியான தெய்வத்தைச் சித்திரிக்கின்றது.
(3) விலங்குகளை பலி பூசைகளுக்கு எடுக்கும் தெய்வத்தைச் சித்திரிக்கின்றது.
(4) நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றலைக் கொண்ட தெய்வமொன்றை சித்திரிக்கின்றது.
(5) கொம்புடனான தலைக்கவசமொன்றை அணிந்த யோகாசன வடிவ தெய்வத்தைச் சித்திரிக்கின்றது. (.........)

**20.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மகா கபி ஜாதகம் எனும் பாருத் செதுக்கல்
(1) உயிரோட்டமும் நுட்பமும் நிறைந்த ஒரு வெளிப்பாடாகும்.
(2) பல சந்தர்ப்பங்களை சுருக்கிய கருப்பொருளை சித்திரிக்குமொன்றாகும்.
(3) இயற்கையோடு நெருங்கிய எண்ணக்கருசார்ந்த பண்புகளை காட்டுமொன்றாகும்.
(4) முப்பரிமான பண்புகளை சிறப்பாக சித்திரிக்கும் செதுக்கல் பலகையாகும்.
(5) கைவினைத் திறனை சிறப்பாக எடுத்துக் காட்டும் வெளிப்பாடாகும். (.........)

[பக் 5 ஐப் பார்க்க

● **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** **K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப் படைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

**21.** **K** எழுத்தினால் காட்டப்படும் மகாஇலுப்பல்லம பண்ணையில் காணப்படும் புத்தர் சிலை,
(1) சுண்ணாம்பு கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட பழைமையான நிற்கும் நிலையிலான சிலையாகும்.
(2) சமபங்க நிலையிலும் ஏகான்ச காவி அங்கியுடனும் (தோளில் ஒரு பக்கம் மட்டும் காவியுடை தரித்த) செதுக்கப்பட்டுள்ள சிலையாகும்.
(3) அவுக்கணை சிலை நிர்மாணிப்பிற்கு முன்மாதிரியாக இருந்த சிலையாகும்.
(4) இந்திய அமராவதிப் பண்புகளை சித்திரிக்கின்ற இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட பழைமையான சிலையாகும்
(5) அதன் முத்திரைகள் மற்றும் காவி அங்கியினூடாக இந்திய கலைப் பண்புகளைச் சித்திரிக்கின்றது (.........)

**22.** **L** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,
(1) பொத்குல் விகாரையருகே அமைந்துள்ள திரிபங்க மெய்நிலையையுடன் கூடிய சிலையாகும்.
(2) பராக்கிரம சமுத்திரம் அருகே அமைந்துள்ள முழுப் புடைப்பாக செதுக்கப்பட்டுள்ள சிலையாகும்.
(3) பொலன்னறுவைக் காலத்தின் பாறையுடன் ஒட்டியதாக செதுக்கப்பட்டுள்ள சிலையாகும்.
(4) லௌகீக கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட உயர் புடைப்புச் சிலையாகும்.
(5) பொலன்னறுவைக் காலத்திற்குரிய நிமிர்ந்த நிலையிலுள்ள அரச வம்சத்தவரொருவரை சித்திரிக்கும் சிலையாகும். (.........)

**23.** **M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'தக்தி பஹி' சிலை,
(1) தியானத்தில் ஆழ்ந்திருக்கும் அமர்ந்த நிலை சிலையாகும்
(2) வீராசன நிலையில் அமர்ந்த நிலை சிலையாகும்.
(3) தியான நிலை மெய்நிலையை சித்திரிக்கும் சிலையாகும்.
(4) தர்ம போதனை செய்யும் சந்தர்ப்பத்தை சித்திரிப்பதாகும்.
(5) வஜ்ராசனத்தின் மீது அமர்ந்திருக்கும் சிலையாகும். (.........)

**24.** **N** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சாரநாத் தூணின் உச்சி,
(1) அசோக மன்னனால் அமைக்கப்பட்ட முதலாவது தூண் உச்சியாகும்..
(2) புத்தரின் முதல் பிரசங்கத்தை குறியீடாக காட்டும் தூண் ஆகும்.
(3) நான்கு சிங்க உருவங்கள் மூலம் நான்கு திசைகளைக் காட்டும் உச்சியாகும்.
(4) புத்தபெருமானின் தர்மத்தை நினை கூர்வதற்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) மௌரிய காலத்தில் அமைக்கப்பட்ட தூண் உச்சியாகும். (.........)

**25.** **O** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நெபர்டிடி எனும் பெயரினால் அழைக்கப்படும் சிலை,
(1) சிறந்த இலட்சிய பெண்ணின் உருவத்தாலான நிர்மாணிப்பாகும்.
(2) மரபு ரீதியான எகிப்திய அம்சங்களற்ற சிலையாகும்.
(3) புதிய இராசதானி காலத்தில் அமைக்கப்பட்ட இயற்கை தன்மையான சிலையாகும்.
(4) எகிப்திய அழகியொருவரின் மார்பளவு சிலையாகும்.
(5) அமர்னாவில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் மார்பளவு சிலையாகும். (.........)

[பக் 6 ஐப் பார்க்க

● **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**26.** மறுமலர்ச்சிக் காலத்தில் காணப்பட்ட பொதுப் பண்பு
(1) கிரேக்க உரோம பாரம்பரிய கலைகளின் விதிமுறைகளை பயன்படுத்தியமையாகும்.
(2) 14 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய கலைப் பிரிவுகளின் எழுச்சியாகும்.
(3) இத்தாலியில் புதிய கலைஞர்களிடையே தோற்றம் பெற்ற கலையாகும்.
(4) இயற்கைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஓவியக் கலை தோற்றம் பெற்றமையாகும்.
(5) ஓவியக்கலைக் கோட்பாடுகளை உள்ளவாறே பயன்படுத்தியமையாகும். (.........)

**27.** 43 ஆம் குழுவினரின் முக்கிய பங்களிப்பு
(1) நிறுவனமயப்படுத்தப்பட்ட சாஸ்திராலய மரபிற்கு நவீனத்துவவாத கலை பயன்பாட்டை அறிமுகப்படுத்திமையாகும்.
(2) சாஸ்திராலய கலை நுட்பங்களை அவ்வாறே பிரபல்யப்படுத்திமையாகும்.
(3) சித்திரக்கலை கோட்பாடுகளை அவ்வாறே பிரபல்யப்படுத்தியமையாகும்.
(4) ஐரோப்பிய நவீனத்துவவாத கலைப் பண்புகளை ஒன்று சேர்ப்பதாகும்.
(5) பல் பாணி கலை அம்சங்களை இலங்கைக் கலைகளில் தாபித்தமையாகும். (.........)

**28.** கட்புல ஊடகப் பயன்பாட்டில் தூரதரிசனம் என அழைக்கப்படுவது
(1) நிறப்பயன்பாட்டில் நிறங்களை கூட்டிக் குறைப்பதனால் காட்டப்படும் கட்புல பிரயோகமாகும்.
(2) மனித கண்ணின் செயற்பாடு காரணமாக ஒரு பொருளின் உண்மை நிலையை காண்பதாகும்.
(3) அண்மை மற்றும் சேய்மையை காட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட கட்புல உபாயமாகும்.
(4) ஏதேனும் ஒன்றை முன்னால் காணும்போது சுருக்கிக் காட்டும் உபாயமாகும்.
(5) பொருளொன்றின் இயற்கைப் பரிமாணத்தை சரியாக வரைவதாகும். (.........)

**29.** விபரண சித்திரக்கலையின் (Illustration art) பிரதான பொறுப்பாக அமைய வேண்டியது
(1) வணிகத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் நிர்மாணிப்பதாகும்.
(2) கருப்பொருளை தூண்டும் வகையில் நிர்மாணிப்பதாகும்.
(3) கருத்துக்களைப் புலப்படுத்தி தெளிவாக தொடர்பாடலை மேற்கொள்வதாகும்.
(4) எழுத்துருவடிவமைப்பினூடாக பொருளைத் தெளிவுபடுத்துதல் ஆகும்.
(5) அச்சிடலுக்கு ஏற்ற வகையில் நிர்மாணித்தலாகும். (.........)

**30.** பின்வருவனவற்றுள் பொலன்னறுவை கால ஓவியக் கலைகூடமாக காணப்படும் திவங்க சிலைமனை தொடர்பான மிகவும் சரியான விடை எது?
(1) இங்கு ஓவியம் தீட்டுவதற்கு சுவர்க்கம், போதிசத்துவர் மற்றும் தெய்வீக எண்ணக்கருக்கள் அடிப்படையாக அமைந்துள்ளன.
(2) ஞானம் பெற்றதன் பின்னரான நிகழ்வுகளைச் சித்திரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.
(3) பல ஜாதகக் கதைகள் வரையப்பட்டிருக்கும் இடமாகும்.
(4) உரிய அளவுத் திட்டத்தினுடனான இயங்கு நிலையிலான மனித உருவங்கள் காணப்படும் இடமாகும்.
(5) சிகிரியா ஓவியத்துடன் சமமான பாரம்பரிய பல வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (.........)

● **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

**31.** இவ்வுருவத்தில் காணப்படுவது,



(1) பொலன்னறுவை தலதாமலுவ முற்றத்தில் அமைந்துள்ள பத்திமாகாரமாகும்.
(2) செங்கல்லினால் அமைக்கப்பட்ட கட்டடக் கலை நிர்மாணமாகும்.
(3) இந்து சமய கட்டடக்கலை பண்புகளுக்கேற்ப அமைக்கப்பட்டதாகும்.
(4) பொலன்னறுவையில் நன்றாக பாதுகாப்பான நிலையில் இருக்கும் ஒரே புத்தர் சிலைமனையாகும்.
(5) பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை மனையாகும். (.........)

**32.** ஹங்குரான்கெத்த பொத்குள் விகாரையில் அமைந்துள்ள இது,



(1) இலங்கையில் காணப்படும் ஓவியங்களினால் அலங்கரிக்கப்பட்ட சைத்தியமாகும்.
(2) கண்டி காலத்துக்குரிய விகாரை மாளிகையினுள் அமைக்கப்பட்டுள்ள சைத்தியமாகும்.
(3) தம்புள்ளை விகாரையின் சைத்தியத்திற்கு நிகரான சிறிய சைத்தியமாகும்.
(4) குகை விகாரையொன்றிற்குள் அமைக்கப்பட்டுள்ள வர்ண சைத்தியமாகும்.
(5) அலங்கார வடிவங்களுடன் கூடிய அழகிய சைத்தியமாகும். (.........)

[பக் 7 ஐப் பார்க்க

**33.** முகலாயர் ஆட்சிக்காலத்தில் வெண் பளிங்குக் கற்களினால் அமைக்கப்பட்ட 'தாஜ்மகால்'



(1) அரச மாளிகையாக அமைக்கப்பட்ட ஒன்றாகும்.
(2) ஞாபக சின்னமாக அமைக்கப்பட்ட ஒன்றாகும்.
(3) புனித தலமாக கட்டியெழுப்பப்பட்டதொன்றாகும்.
(4) கலையரங்காக கட்டியெழுப்பப்பட்டதொன்றாகும்.
(5) மாளிகையாக அமைக்கப்பட்டதொன்றாகும்.

(.........)

**34.** சிந்துவெளி நாகரிக இடிபாடுகளிடையே காணப்படும் இந்த கட்டடக்கலை நிர்மாணம்



(1) நகரின் அசுத்த நீரை சேகரிப்பதற்காக அமைக்கப்பட்ட கிணறாகும்.
(2) பிரபுத்துவ வர்க்க ஆட்சியாளர்களுக்காக அமைக்கப்பட்ட கிணறாகும்.
(3) பல வீடுகளின் வரிசைக்காக அமைக்கப்பட்ட பொதுக் கிணறாகும்.
(4) விவசாய செயற்பாடுகளுக்காக அமைக்கப்பட்ட பொதுக் கிணறாகும்.
(5) நீரை சேகரிப்பதற்காகவும் விநியோகிப்பதற்காகவும் கட்டப்பட்டதாகும்.

(.........)

**35.** கொலோசியம் எனப்படுவது



(1) உரோம கட்டடக்கலைப் பண்புகளை உள்ளடக்கிய கட்டிடமாகும்.
(2) உரோமர்களின் பலத்தை வெளிப்படுத்தும் லௌகிக கட்டிடமாகும்.
(3) சண்டைக் காட்சிகளுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்ட இடமாகும்.
(4) நீள் வட்ட வடிவ தரை அமைப்புடன்கூடிய இடமாகும்.
(5) பார்வையாளர் அரங்காக மட்டும் பயன்படுத்தப்பட்ட இடமாகும்.

(.........)

● **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை,** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தித் தெரிவுசெய்க.



**36.** இவ்வோவியத்தினால் சித்திரிக்கப்படுவது
(1) தோடி இராகமாகும்.
(2) பைரவ இராகமாகும்.
(3) ஆசாவரி இராகமாகும்
(4) மாலா ஸ்ரீ ராகினி இராகமாகும்.
(5) தீபக் இராகமாகும்.

(.........)

**37.** இந்த வடிவமைப்பின் நுட்பமானது
(1) முழு வடிவமைப்பிலும் பெண்ணை மையப்படுத்திய பாத்திரமாக பயன்படுத்தியமையாகும்.
(2) மத்தியில் இருக்கும் பெண்ணின் இருபக்கங்களிலும் மான்கள் சமமாகக் காட்டப்பட்டிருப்பதாகும்.
(3) மேலே மற்றும் கீழே காட்டப்பட்டிருக்கும் விளிம்புகளில் ஒரே அலங்காரப் போக்கு மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(4) ஓவியத்தில் காணப்படும் இரு மரங்கள் இரு பக்கங்களுக்கும் சமமானதாக பயன்படுத்தப் பட்டுள்ளமையாகும்.
(5) சமச்சீரை அடிப்படையாகக் கொண்டு இரேகை வடிவங்கள் பொருத்தியமைக்கப் பட்டுள்ளமையாகும். (………)

**38.** ஓவியத்தில் காணப்படும் ஒரு நுட்பத்திறன்
(1) பிரதான பாத்திரத்தைத் தீவிரப்படுத்தும் வகையில் ஏனைய பாத்திரங்கள் அதற்கு இணையானதாக பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(2) இரு பக்கங்களிலுமுள்ள மான்கள் மற்றும் மரங்கள் மத்தியில் காணப்படும் உருவத்தை ஈர்க்கப்படும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(3) பெண்ணொருவரின் வீணை வாசிப்பை நோக்கி அனைத்து வெளிப்புற பொருட்களினதும் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகும்
(4) கருப்பொருளைத் தூண்டும் வகையில் வர்ணங்கள், இரேகைகள் மற்றும் வடிவங்கள் சந்தத்திற்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(5) தட்டையான வடிவங்கள் அலங்காரத்தின் சார்பாக கருப்பொருளிற்குப் பொருந்தும் வகையில் பயன்படுத்தியுள்ளமையாகும். (………)

**39.** ஓவியத்தின் ஓவிய மொழியின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுவது
(1) இயற்கைக்கு மாறாக கலைப்பாங்கான வடிவங்களின் மூலம் இராகத்தில் இருந்து வெளிப்படும் உணர்வுகளை வெளிப்படுத்துவதாகும்.
(2) ஒரு புள்ளி நோக்கு நிலையைப் போன்றே பல புள்ளி நோக்கு நிலையைப் பயன்படுத்தியிருத்தலாகும்.
(3) ஓவியத்திலுள்ள விடயங்களை வெளிப்படுத்திக் காட்டுவதற்குத் தட்டையான வர்ணங்களை கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தியுள்ளமையாகும்.
(4) விலங்குகளின் உருவங்கள் மற்றும் மரங்கள் மத்தியில் காணப்படும் உருவத்தின் திசைக்கு ஈர்க்கப்படும் வகையில் காட்டப்படுவதனால் இராகத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்வை விளக்குவதாகும்.
(5) மனித மற்றும் விலங்கு உருவங்கள் மிகவும் விளக்கமாக வெண்மை சார்ந்த வர்ண சாயலில் விபரிக்கப்பட்டிருத்தல் ஆகும். (………)

**40.** ஓவியத்தில் உணர்வுகளை சித்திரிக்கும்போது
(1) இசையின் அர்த்த சுவை மற்றும் சப்த சுவை மூலம் வெளிப்படும் இயற்கையான புதுமையை வெளிப்படுத்துவதற்கு கலைஞன் எடுத்த முயற்சி வெற்றிபெற்றுள்ளது.
(2) இசையின் பாவ வடிவத்தை வெளிப்படுத்தி காட்டுவதற்கு வெளிப்புற பொருட்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் முறையில் நுட்பத்திறன் சிறப்பாக வெளிப்படுகிறது.
(3) கருப்பொருள் வெளிப்படும் வகையில் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களை பயன்படுத்தியிருக்கும் விதம் போற்றுதற்குரியது.
(4) மத்தியில் காணப்படும் நீல நிறம், ஓவியப் பொருட்களை வெளிப்படுத்தி காட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள விதம் சிறப்பானது.
(5) மத்தியிலுள்ள பெண்ணின் இசைக்கு, இயற்கையுடன் பொருந்தும் வகையில் ஓவியத்தில் காட்டப்படுவது நுட்பத்திறனைக் காட்டுகின்றது. (………)

* *

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

## பகுதி II

※ இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது.

※ **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ'**, **'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

(தேவையான இடங்களில் பரும்படிப் படங்களைப் பயன்படுத்துதல் உங்களுக்கு அனுகூலமாக அமையும்.)

### பகுதி - 'அ'

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** அநுராதபுர காலத்தில் ஆரம்பித்த தூபி மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டடக்கலை அம்சங்கள் பல்வேறு காலகட்டங்களில் வேறுபட்ட கலைத்துவ பண்புகளை வெளிப்படுத்துகிறது.

(i) காவற்கல்லை குறிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படும் **இரண்டு** பெயர்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) வாகல்கட தொடர்பாக சுருக்கமான கலைத்துவமிக்க மதிப்பீடொன்றை மேற்கொள்க. (05 புள்ளிகள்)

(iii) அநுராதபுர காலத்திலிருந்து கண்டிக் காலம் வரையில் 'கொரவக்கல்' நிகழ்ந்த இல் மாற்றங்கள் தொடர்பாக பகுப்பாய்வு ரீதியான மதிப்பீடொன்றை மேற்கொள்க. (08 புள்ளிகள்)

**2.** யாப்பகுவை கால கட்டடக்கலை மற்றும் செதுக்கல்கள் நிர்மாணிப்பின்போது பயன்படுத்தப்பட்ட கல் ஊடகமானது, கம்பளைக் காலத்தில் மர ஊடகத்திலான செதுக்கல்களாக மாற்றமடைந்தது.

(i) யாப்பகுவை குன்றையொட்டி கட்டியெழுப்பப்பட்டுள்ள **இரண்டு** கட்டடக்கலை நிர்மாணிப்புகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) கம்பளைக் கால லங்காதிலக்க விகாரையின் அடிப்படைக் கட்டடக்கலையின் அம்சப் பண்புகள் தொடர்பாக சுருக்கமாக மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) யாப்பகுவைக் கால கல்லாலான கட்டடக்கலை அம்சங்கள் மற்றும் செதுக்கல்கள், கம்பளைக்கால மரத்தாலான கட்டடக்கலை அம்சங்கள் மற்றும் செதுக்கல்களாக மாற்றமடைந்த விதத்தை ஒப்பீட்டடிப்படையில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

**3.** இலங்கை நவீனத்துவவாத கலைப் பிரவேசத்தை மேற்கொண்ட கலைஞர்களிடையே ஓவியம் மற்றும் சிற்பக்கலை இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர்கள் தனித்துவமானவர்கள்.

(i) ஏ. மார்க் கலைஞரால் நிர்மாணிக்கப்பட்ட 'மனிதனும் நாய்களும்' சிலையில் செல்வாக்கு செலுத்தியுள்ள கலைப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) திஸ்ஸ ரணசிங்க கலைஞரால் நிர்மாணிக்கப்பட்ட 'மகீஷாசுரனின் மரணம்' சிற்பம் தொடர்பாக சுருக்கமான கலைத்துவமிக்க மதிப்பீடொன்றை மேற்கொள்க. (05 புள்ளிகள்)

(iii) "இலங்கை நவீன ஓவியக் கலைஞர்களிடையே கலப்பு ஊடகங்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட நிர்மாணங்கள் மிகவும் சிறப்பானவையாகும்."

- ஏ. மார்க் கலைஞரால் நிர்மாணிக்கப்பட்ட 'பெயரிடப்படாத (Untitled) ஓவியம்' மற்றும் எச். ஏ. கருணாரத்ன கலைஞரால் நிர்மாணிக்கப்பட்ட 'வாழ்கையின் அரவணைப்பு' எனும் படைப்புக்களின் அடிப்படையில் மேலே கூறப்பட்ட கூற்றை ஒப்பீட்டடிப்படையில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

[பக் 10 ஐப் பார்க்க

## பகுதி - 'ஆ'

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**4.** தென்னிந்திய கலை மரபில் பல்லவ மற்றும் சோழர் கால மரபுகள் மிகவும் தனித்துவமானவை.

(i) சோழர் கால கலை மரபையொட்டி நிர்மாணிக்கப்பட்ட சிவ தட்சிணாமூர்த்தி மற்றும் சிவ பிக்ஷாடனமூர்த்தி ஆகியவற்றின் ஊடகங்களை முறையே குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பல்லவர் கால கலை மரபிற்குரிய 'ஆகாய கங்கை இறக்கம்' செதுக்கல் தொடர்பாக சுருக்கமாக கலைத்துவமிக்க மதிப்பீடொன்றை மேற்கொள்க (05 புள்ளிகள்)

(iii) பல்லவர் கால கலை நிர்மாணங்களில் ஒன்றான பஞ்ச பாண்டவர் இரத கோயில்களிடையே காணப்படும் 'பீமர் இரத கோயில்' மற்றும் சோழர்கால கட்டடக்கலையிலான 'இராஜராஜேஸ்வரம் கோயில்' தொடர்பாக வடிவம் மற்றும் கட்டடக்கலை பண்புகளை உள்ளடக்கி ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

**5.** நவீன இந்திய கலைஞர்கள், ஐரோப்பிய சாஸ்திராலய யதார்த்தவாத கலைப் பண்புகளை அதிகளவில் பயன்படுத்தினாலும் இந்திய மறுமலர்ச்சி (New life movement) இயக்க கலைஞர்கள் இந்திய மற்றும் கீழைத்தேய செல்நெறிகள் மற்றும் நுட்பமுறைகளைப் பயன்படுத்தினர்

(i) இந்திய மறுமலர்ச்சிக்கலை (New life movement) இயக்கத்திற்குரிய முன்னோடிக் கலைஞர்களுள் ஒருவரான அபினிந்திரநாத் தாகூரின் **இரண்டு** ஓவியங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) அம்ரிதா ஷர்கிலின் ஓவியங்களில் தாக்கம் செலுத்திய கலைப் பாணிகள் மற்றும் செயன்முறைகள் தொடர்பாக சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) ஜெமினி றோயின் 'பூனையும் சிங்கறாலும்' ஓவியம் மற்றும் நந்தலால் போஸின் 'விரகதாபம்' ஓவியம் ஆகியவற்றுக்கிடையிலான செல்வாக்கு, தனித்துவ பண்புகள் மற்றும் **இரு** ஓவியங்களுக்கிடையிலான ஒற்றுமைகள் வேற்றுமைகள் தொடர்பாக ஒப்பீட்டாய்வு செய்க. (08 புள்ளிகள்)

## பகுதி - 'இ'

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6.** எகிப்து மற்றும் உரோம நாகரிகங்களினூடாக பல சிறப்பான கலை நிர்மாணங்கள் உலகிற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

(i) எகிப்திய நாகரிகத்திற்குரிய நவீன இராசதானிகளின் கட்டடக்கலை பண்புகளை தெளிவாக வெளிப்படுத்தும் **இரண்டு** தேவாலயங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) 'டயோனிசியஸ் தெய்வ வழிபாட்டுடன்' தொடர்புடைய ஓவியத்தில் பெண் ஒருவரைத் தண்டிக்கும் சந்தர்ப்பம் என்னும் உரோம ஓவியத்தில் மனித உருவங்களின் தொகுப்பு மற்றும் ஒழுங்கமைப்புப் பண்புகளை சுருக்கமாக ஆராய்க. (05 புள்ளிகள்)

(iii) எகிப்திய கலைக்குரிய 'மொன்குறே அரசனும் அவனது மகாராணியும்' சிலையில் நிலையான பாணிப் பண்புகள் மற்றும் உரோம கலைக்குரிய 'ஒகஸ்ட்ரஸ் சீசர்' சிலையின் இயற்கையான சந்தச் சுபாவ பண்புகள் தொடர்பாக ஒப்பிட்டாராய்க. (08 புள்ளிகள்)

**7.** கனவடிவவாதம், மீயதார்த்தவாதம் (surrealism) மற்றும் அரூப வாத கலை ஆகியன இருபதாம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற முன்னோடி கலை இயக்கங்களாகும்.

(i) கனவடிவவாத, கலை பிரவாகத்தின் முன்னோடி ஓவியக் கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) அரூப பாணியை பின்பற்றி நிர்மாணச் செயற்பாட்டில் பிரவேசித்த வசிலி கண்டிஸ்கியின் 'ஒழுங்கமைப்பு VII (Composition VII)' என்னும் ஓவியம் தொடர்பாக சுருக்கமாக மதிப்பிடு செய்க. (05 புள்ளிகள்)

(iii) ப்ரீடா காலோவின் 'ப்ரீடா இருவர் (Two Fridas)' என்னும் ஓவியம் மற்றும் சல்வதோர் டாலியின் 'நீடித்த நினைவு (The Persistence of Memory)' ஆகிய ஓவியங்களுக்கு காரணமான சித்தாந்தம் மற்றும் பயன்பாட்டு உபாயம் தொடர்பாக ஒப்பீட்டாராய்க. (08 புள்ளிகள்)

❊ ❊ ❊

Past Papers Wiki



AL/2026/51/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

චිත්‍ර කලාව II
சித்திரக்கலை II
Art II

51 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள் தொகுதியை நன்றாக விளங்கிக்கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணைச்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- வர்ணச் சித்திரம் வரைவதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட **வரைதல் தாளைப்** (Drawing paper) பயன்படுத்துக. வேறு எந்தவொரு சித்திரத்தையோ பரும்படிக் குறிப்பையோ வரையத் தேவையில்லை.
- உமது விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டச் சித்திரமும்

பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள்தொகுதியை வரைந்து, வர்ணந்தீட்டுக.

※ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.

※ பொருள்களின் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.

※ உமக்குத் தெரிகின்ற விதத்தில் பொருள்தொகுதியை வரைந்து அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந்தீட்டுக.

※ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.

※ பொருள்தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.

※ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள ஆதாரப்பலகையின் அளவைப் பொருள்கூட்டத்திற்குப் பொருத்தமானதாக மாற்றிக்கொள்ள முடியும்.

※ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல், எக்ரலிக், நிற பென்சில் ஆகிய வர்ண ஊடகங்களுள் ஒன்றையோ சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளலாம்.

※ ※ ※

PAST PAPERS WIKI

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

AL/2026/51/T-III

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

චිත්‍ර කලාව III
சித்திரக்கலை III
Art III

51 T III

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணையும்** தெரிவுசெய்த **வினாவின் இலக்கத்தையும்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல், எக்ரலிக், வண்ணப் பென்சில் போன்ற வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
- தேவைப்படுவோருக்குத் திசுத்தாள் வழங்கப்படும்.
- சித்திரத்தைக் கையளிக்கும்போது அது முழுமையாக உலர்ந்திருத்தல் முக்கியமாகும். ஈரமான சித்திரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையினால் அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

- பின்வரும் **அ, ஆ, இ** ஆகிய மூன்று பகுதிகளிலிருந்து **ஒரு** தலைப்பை **மாத்திரம்** தெரிவுசெய்து, வர்ணச் சித்திரம் **ஒன்றை** வரைக.

## பகுதி - அ : சித்திர ஒழுங்கமைப்பு

1. மோட்டார் வாகனமொன்றில் நீண்ட தூரம் பயணம் செய்யும் சிலர் வழியில் இளநீர் (செவ்விளநீர்) அருந்தி தாகம் தீர்க்கும் சந்தர்ப்பம்
2. தேர்தல் சமயத்தில் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்சி ஆதரவாளர்கள்
3. வீதியின் குறுக்கே பிரவேசித்த பசுக் கூட்டத்தினால் ஏற்பட்ட வாகன நெரிசல்
4. சினிமாப் படக் காட்சி / இசை நிகழ்ச்சி / மேடை நாடகமொன்று முடிவடைந்து வெளியேறும் பார்வையாளர்கள்

## பகுதி - ஆ : அலங்கார ஆக்கம்

5. மரபுரீதியான அலங்காரப் பாணியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நவ நிர்மாணப் பாங்கிலான வடிவங்களைப் பயன்படுத்தி பாடசாலையொன்றின் கீழைத்தேய வாத்தியக் குழுவிற்குப் பொருத்தமான ஆடை வடிவமைப்பை (மாதிரி உருவத்திற்கு ஆடை அணிவித்து) திட்டமிட்டு நிறந்தீட்டுக.
6. தரை ஓடொன்றில் குறைந்தது இரண்டு அலங்கார மீன் வடிவங்கள் மற்றும் நீர்த் தாவர வடிவங்களைப் பயன்படுத்தி நான்கு தரை ஓடுகள் ஒன்று சேரும்போது பரவலங்காரமொன்று உருவாகும் வகையில் திட்டமிட்டு நிறந்தீட்டுக.
7. கண்காட்சியொன்றில் வைப்பதற்குப் பொருத்தமான வகையில் விவசாயத்திற்கு உரிய செயற்பாடுகளைச் சித்திரிக்கும் சுவர்ச் செதுக்கலொன்றை $5' \times 10'$ (அடி) அளவில் திட்டமிட்டு நிறந்தீட்டுக (அளவினை பரிமாணத்திற்கேற்ப தயாரிக்குக.)

## பகுதி - இ : கிறபிக் சித்திர ஆக்கம்

8. சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதை வலியுறுத்தும் நோக்கில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்படும் சுவரொட்டிப் போட்டியில் முன்வைப்பதற்குப் பொருத்தமான சுவரொட்டியொன்றை திட்டமிட்டு நிறந்தீட்டுக.
9. ஒரு புதிய சொக்லேட் வர்த்தக நாமம் தொடர்பாக நுகர்வோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வர்த்தக நிலையமொன்றில் தொங்கவிடுவதற்குப் பொருத்தமான தொங்கும் விளம்பரமொன்றை (Dangler) திட்டமிட்டு நிறந்தீட்டுக.
10. ஆமைகளை பாதுகாக்கும் இயக்கமொன்றிற்குப் பொருத்தமான இலட்சினையொன்றைத் திட்டமிட்டு நிறந்தீட்டுக.(இலட்சினையின் இறுதி வடிவமைப்பு வரையிலான செயன்முறைகளை முன்வைக்குக.)

WWW.PastPapers.WiKi

***

Past Papers Wiki
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library